**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மற்றும் 1958 இன் 04 ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயம் ஒன்று வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதறக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை விநியோகிப்பது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்குஅடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 7 இன் 8 (அ) மற்றும் (ஆ) பந்தி பிரகாரம் பிணை வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வெண்டிய போதும் மீளாய்வாண்டில் வங்கி மேலதிக பற்று தொடர்பாக பிணையாக வைக்கப்பட்ட நிலையான வைப்புக்களிற்குரியதாக நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 திகதி வரை நிறுவனத்தினால் பெற்றுக் கொண்டுள்ள வங்கி மேலதிக பற்று மற்றும் வங்கிக் கடன்களுக்காக பிணை வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்களை 2021 நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | பிணையாக வைக்கப்பட்ட நிலையான வைப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் 37 பந்தி பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தனி | வலஹன்துவ தோட்டத்தை 2012 ஆண்டில் ரூபா 620 மில்லியனிற்கு | அனைத்து காணிகள் மற்றும் தோட்டங்கள் கணக்கீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | உரிமை காணிகள் மற்றும் 14 தோட்டங்களுக்குரிய ஹெக்டயார் 10,917 ஆன காணிகளின் பெறுமதிகளை கணக்கீடு செய்யதிருக்கவில்லை | மதிப்பிட்டுள்ளதுடன் பல ஆண்டுகளாக நிறுவனம் முகம்கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக ஏனைய காணிகளை மதிப்பிட முடியாதுள்ளன. தேவையான நிதி பொது திறைசேரியிடமிருந்து கிடைத்தவுடன் இப்பணி ஆரம்பிக்கப்படும். | வேண்டும். |
| (இ) | நியமம் 16 இன் 37 பந்தியின் பிரகாரம் ஒரே சம தன்மையான மற்றும் பயன்பாட்டை உடைய சொத்துக்கள் மாத்திரம் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பெருந்தோட்டங்களில் காணப்படும் கணனிகள், உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் ஆகிய நிலையான சொத்து வகைகள் அனைத்து உபகரணங்கள், தளபாடங்கம் மற்றும் பொருத்திகள் ஆகிய தனி உருப்படிகளின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடந்த காலங்களிலிருந்து பெருந்தோட்டங்களிற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள கணனிகள், உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஒரு பெறுமதியாக கணக்கிடப்பட்டுள்ளதால் இப் பிரச்சினை எழுந்துள்ளது. 2022 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இந்த தவறை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து நிலையான சொத்துக்களும் நியமம் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நியமம் 16 இன் 37 பந்தியின் பிரகாரம் விவசாய நடவடிக்கைகளுக்குரிய உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நிதிநிலைமை கூற்றில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தனியான உருப்படியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், விஞ்ஞான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | விவசாய நடவடிக்கைகளுக்குரிய விஞ்ஞான சொத்துக்களின் பெறுமதி 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தனியான உருப்படியாக சமர்ப்பிக்கப்படும். | விஞ்ஞான சொத்துக்கள் நிதி நிலைமை கூற்றில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தனியான உருப்படியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | நியமம் 40 இன் 75 (அ) பந்தியின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களை அளவையிட பயன்படுத்தும் படிவத்தை நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டுள்ள முதலீட்டு ஆதனங்கள் கிரயம் அல்லது நியாயமான பெறுமதி ஆகிய இரண்டு படிவங்களில் எந்தப் படிவத்தை பயன்படுத்தியுள்ளதென வெளிப்படுத்தியிருக்காததுடன், 1992 ஆண்டில் பிராந்திய தோட்டக் கம்பனி ஐந்தொகையில் ரூபா 1,612 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதியையே மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் | 1992 ஆண்டில் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனங்களிற்குரிய காணிகள் பிராந்திய தோட்டக் கம்பனிகளிற்கு குத்தகை வழங்கும் போது மேற்கொண்டுள்ள மதிப்பிடலின் பிரகாரம், அந்த கம்பனிகளின் ஐந்தொகைகளில் குறித்த சொத்துக்கள் தொடர்பாக பெறுமதிகள் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அப் பெறுமதிகள் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் | முதலீட்டு ஆதன பெறுமதி கணக்கிடப்பட்டுள்ள முறையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அச் சொத்துக்கள் மீண்டும் மதிப்பிடுவது தொடர்பாக பெருந்தோட்ட அமைச்சுடன் கலந்துரையாடி தேவையான முயற்சிகளை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | நியமம் 40 இன் 75 (ஏ) மற்றும் 78 பந்தி பிரகாரம் ரூபா 1,612 மில்லியனான முதலீட்டு சொத்தொன்றின் (குத்தகை வழங்கப்பட்ட தோட்டங்கள்) கொள்வனவு, நிர்மாணம் அல்லது அபிவிருத்தி செய்யப்படும் அல்லது திருத்தம், பராமரிப்பு அல்லது மேம்படுத்தல்களிற்கான உடன்படிக்கை ரீதியான கடப்பாடு மற்றும் முதலீட்டு ஆதன விபரம், நியாயமான பெறுமதி நம்பமாக நிர்ணயித்து வெளிப்படுத்த வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் 1982 பெப்ரவரி 27 திகதிய இலக்கம் 181/12 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மூலம் வழங்கியுள்ள ஆதனம் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை அரச பெருந்தோட்ட கம்பனிகளிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணி மற்றும் பிராந்தி பெருந்தோட்ட கம்பனிகளிற்கு குத்தகை வழங்கப்பட்ட காணிகள் தொடர்பான விபரங்கள் 2022 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நியமம் பிரகாரம் முதலீட்டு ஆதனம் தொடர்பான விபரமொன்றை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |
| (எ) | நியம 41 இன் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பயிர்செய்கை, நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதும், கிரயம் ரூபா 30,313,346 ஆன பயிர்செய்கை விஞ்ஞான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பயிர்ச்செய்கைகள் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பயிர்ச்செய்கைகள் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | நியமம் 41 இன் 43, 44 மற்றும் 45 பந்திகளின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் முதிர்ந்த மற்றும் முதிர்ச்சியடையாத பயிர்ச் செய்கையாக வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 169,202,749 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் அவ்வாறு வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தேயிலை மீள் பயிரிடலிற்குரியதாக 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் முதிர்ச்சியடையாத தேயிலை பயிரசெய்கையின் (Immature Plantation) கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது 2020 மற்றும் 2020 ஆண்டிற்கு முன்னரான | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் முதிர்ந்த மற்றும் முதிர்ச்சியடையாத பயிர்ச் செய்கையாக வெவ்வேறாக வகைப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டுகளிற்குரியதாக தேயிலை மீள் பயிர்ச்செய்கைக்காக மேற்கொண்டுள்ள செலவுகள் உரியவாறு வகைப்படுத்தி காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | நியமம் 19 இன் 57 பந்தி பிரகாரம் நிறுவனத்தின் சேவை நலன்கள் கடப்பாடு கணக்கிடலின் போது ஆயுள் கணக்கெடுப்பு முறையை பயன்படுத்த வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தினால் தமது நலன்களை கணிப்பிடும் போது ஆயுள் கணக்கெடுப்பு முறையை பயன்படுத்தி இருக்கவில்லை. | 2022 ஆண்டிற்குரியதாக நிறுவனத்தின் சேவை நலன்களை கணக்கிடும் போது ஆயுள் கணக்கெடுப்பு முறையை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சேவை நலன்கள் கடப்பாடு கணக்கிடலின் போது ஆயள் கணக்கெடுப்பு முறையை பயன்படுத்த வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் இலக்கம் 3.1.4.2 ஆம் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நியாயமான பெறுமானத்தில் வெளிப்படுத்தி உள்ளதாக குறிப்பிட்டுள்ள போதும், 2012 ஆம் ஆண்டில் நிலவிய ரூபா 3,312,160,200 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்கபப்ட்ட ரூபா 2,420,933 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நியாயமான பெறுமானத்தில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இவ்வாறு நியாயமான பெறுமானத்திற்கு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 11 தோட்டங்களில் 726.73 ஹெக்டயார்களில் பரவியுள்ள வன பயிர்ச்செய்கைகள் மீளாய்வாண்டு இறுதியில் 4 சதவீத்தினால் அதாவது ரூபா 1,101,536 இனால் காலக் கழிவு செய்து கணக்கீடு செய்யப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தின் நட்டமும் அப்பெறுமதியால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் நிறுவனத்திற்கு சொந்தமான நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை மதிப்பிட நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறோம். அவ்வாறே 2019 ஆண்டிற்காக நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள பெறுமானத் தேய்வுப் பெறுமதியை 2022 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது மீள் செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் கணக்குக் குறிப்பு 3.1.4.2 ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான நுகர்வு சொத்துக்கள் நியாயமான பெறுமதியிற்கு பெறுமானமிட்டு வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 6,189,400 ஆன கிடைக்க வேண்டிய குத்தகை வருமானமொன்றை இனங்காணாததன் மீது அப் பெறுமதியால் கூட்டுத்தாபனத்தின் நட்டம் மிகை கணக்கிடப்பட்டு நடைமுறை சொத்துக்கள் குறைவடைந்திருந்தன. | குறித்த செம்மையாக்கல் 2022 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | விடுபட்டுள்ள குத்தகை வாடகை வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் மொத்த இருப்பு பெறுமதியின் 72 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்தும் கெலேபொக்க, ரங்கல மற்றும் மிட்லேன் தோட்டங்களில் மற்றும் தரகர்களிடம் காணப்படும் ரூபா 45,238,955 பெறுமதியான பூர்த்தியான தேயிலை இருப்பு மற்றும் ரூபா 1,609,054 ஆன நுளம்பு குச்சில்களை பௌதீக ரீதியாக ஒப்பாய்வு செய்யாது 2017 ஆண்டின் புத்தகப் பெறுமதி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | தோட்டங்களில் காணப்படும் தேயிலை, பசளைகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் போன்ற அனைத்து இருப்புக்களும் பௌதீக ரீதியாக ஒப்பாய்வு செயயப்பட்டு அப் பெறுமதிகளின் பிரகாரம் 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | ஆண்டிறுதியில் இருப்பு ஒப்பாய்வினை மேற்கொண்டு அந்த பௌதீக இருப்பு அளவை சரியாக பெறுமானமிட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |
| (இ) | நிதிநிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் கடன்படுனர் மீதிக்கு 06 தோட்டங்களின் ரூபா 8,051,222 பெறுமதியான நாற்று மேடைகள் உள்ளடங்கியிருந்தன. எனினும் அந்த நாற்று மேடைகள் பௌதீக ரீதியாக இல்லாதமை அல்லது காலாவதியான காரணத்தால் அவற்றின் பெறுமதி பூச்சிய பெறுமானத்தை எடுத்திருந்தது. | 2022 ஆண்டில் தோல்வி அடைந்துள்ள தேயிலை நாற்று மேடைகள் தொடர்பாக விசாரித்துப் பார்த்து பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது குறித்த கணக்கு சீராக்கத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பௌதீக ரீதியாக காணப்படாத நாற்று மேடைகளின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்ற வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் 04 தோட்டங்களில் ஊழியர் சேமலா நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தொடர்பாக நீதிமன்றத்தில் செலுத்தப்பட்ட ரூபா 61,393,076 மற்றும் ரூபா 5,098,723 ஆன தொகையானது 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பிழையாக வகைப்படுத்தப்பட்டு நிதிய வைப்பாக வியாபார பெறவேண்டியவற்றினுள் உள்ளடக்கியுள்ளதுடன் அதனை செலுத்த வேண்டிய ஊழியர் சேமலா நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களிலிருந்து | 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த கணக்கீட்டு தவறு சீராக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட்ட ஊழியர் சேமலா நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் குறித்த பொறுப்புக் கணக்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அகற்றாத காரணத்தால் அப் பெறுமதியினால் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் அதிகரித்திருந்தது. மேலும் செலுத்தப்பட்ட அந்த மிகை அறவீட்டு அளவு, செலுத்த வேண்டிய ஊழியர் சேமலா நிதிய மிகை அறவீட்டுக் கணக்கிலிருந்து மற்றும் செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய மிகை அறவீட்டுக் கணக்கிலிருந்து அகற்ற கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | கூட்டுத்தாபனத்தின் ரூபா 80,087,086 ஆன பணிக்கொடைக்கான ஒதுக்கத்தை ஆண்டின் செலவாக இனங்காணாது கடந்த ஆண்டுகளின் இலாபத்திற்கு செம்மையாக்கியதால், அப் பெறுமதியால் மீளாய்வாண்டின் நட்டம் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2019 ஆண்டில் தோட்டங்களில் தொழிலாளர் சம்பளம் செலுத்துவதற்குரிய கூட்டுமொத்த உடன்படிக்கைளும் திருத்தப்பட்டதனால் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் ரூபா 500 இலிருந்து ரூபா 700 வரை அதிகரித்தமையால், அதன் பிரகாரம் கடந்த ஆண்டுகளிற்குரிய பணிக்கொடை ஒதுக்கம் தொடர்பாக செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் அந்த கணக்கீடு சரயாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பதிலுடன் இணங்க முடியாததுடன் குறித்த சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | கூட்டுத்தாபனத்தின் பணிக்கொடைக்கான ஒதுக்கம் மற்றும் செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்கிடல் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மற்றும் கணக்காய்வாளரின் கணக்கிடலிற்கு இடையில் முறையே ரூபா 142,418,900 மற்றும் ரூபா 75,436,147 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கூட்டுத்தாபனத்தின் பணிக்கொடைக்கான ஒதுக்கம் மற்றும் செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்கிடல் தொடர்பாக எற்பட்டுள்ள தவறு 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கப்பட்டுள்ளது. | இந்த மாற்றம் சீராக்கப்பட வேண்டும். |
| (எ) | தோட்டங்களிற்கு இடையிலான கட்டுப்பாட்டு கணக்ககளில் வரவு மற்றும் செலவு மீதிகளிற்கிடையில் ரூபா 1,930,180 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | தோட்டங்களிற்கு இடையிலான கட்டுப்பாட்டு கணக்ககளில் வரவு மற்றும் செலவு மீதிகளில் உள்ள இந்த வித்தியாசத்தை பரீட்சித்து தேவையான கணக்கு செம்மையாக்கல் 2022 ஆண்டினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | தோட்டங்களிற்கு இடையிலான கட்டுப்பாட்டு கணக்ககளில் மீதிகளை தீர்துக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | பிரதான அலுவலகத்தில் மற்றும் தோட்டங்களிற்கிடையில் இடம்பெரும் பண்டங்கள் மற்றும் பண மாற்றங்களிற்காக பேணிச்செல்லப்படும் நடைமுறை கணக்கினுள் ஒவ்வொன்றிற்கு பதிலீடாகாத ரூபா 11,837,880 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பிரதான அலுவலகத்தில் மற்றும் பெருந்தோட்டங்களிற்கு இடையில் நடைமுறை கணக்ககளில் காணப்படும் வித்தியாசங்களை பரீட்சித்து தேவையான கணக்கு செம்மையாக்கல்கள் 2022 ஆண்டினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை கணக்குகளில் காணப்படும் வித்தியாசங்களை இனங்கண்டு தீர்துக்கொள்ள வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

.

| | விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 396,140,961 | 290,264,894 | 105,876,067 | 2021.12.31 திகதியன்று பேரேட்டு மீதிகள் பிரகாரம் அத்திகதிக்கு நிதி நிலைமை கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பொருந்தும் வகையில் நிலையான சொத்துக்கள் அட்டவணையும் தயாரிக்கப்ட்டுள்ளது. | இந்த வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான இணக்கத்தை மேற்கொண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் | 544,512,681 | 532,365,458 | 12,147,223 | 2021.12.31 திகதியன்று பேரேட்டு மீதிகள் பிரகாரம் அத்திகதிக்கு நிதி நிலைமை கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பொருந்தும் வகையில் நிலையான சொத்துக்கள் அட்டவணையும் தயாரிக்கப்ட்டுள்ளது. | இந்த வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான இணக்கத்தை மேற்கொண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | காணிப் பெறுமதி | 4,031,845 | 2,386,505 | 1,645,340 | இந்த கணக்கீட்டு தவறு 2021 நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | இந்த வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான இணக்கத்தை மேற்கொண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஈ) | ஏனைய இடைக்கால பயிர்களிற்கான சேர்ப்பனவுகள் | 582,224 | 884,517 | 302,293 | இந்த கணக்கீட்டு தவறு 2021 நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | இந்த வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான இணக்கத்தை மேற்கொண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | மூலதனமாக்கப்பட்ட வனப் பயிர்ச்செய்கை மீதி | 5,807,917 | 6,000,217 | 192,299 | இந்த கணக்கீட்டு தவறு 2021 நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | இந்த வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான இணக்கத்தை மேற்கொண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | பணிக்கொடை செலுத்துதல் | 14,384,929 | 10,894,992 | 3,489,937 | பணிக்கொடை செலுத்துதல் தொடர்பாக 2019 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகை சரியானதுடன் அட்டவணைகளில் நிலவிய இவ்வாறான குறைபாடுகள் கனிசமான அளவு 2021 ஆண்டில் சரிசெய்யப்பட்டுள்ளது. | இந்த வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான இணக்கத்தை மேற்கொண்டு வித்தியாசத்தை சீராக்கிக் கொள்ள வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | **விடயம்** | **தொகை**<br>**ரூபா** | **சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்**<br>**ரூபா** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 974,808,631 | உறுதி/ அனுமதிப்பத்திரம், மதிப்பீட்டு அறிக்கை, வீதவரி கட்டணம் செலுத்தும் அறிக்கை மற்றும் வாகனங்கள் பதிவு சான்றுகள் | நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்களில் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள தேவையான ஆவனங்கள்ளுடனான கோவைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. | காணிகளின் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உறுதி செய்து கொள்ளவதற்காக உறுதி/ அனுமதிப் பத்திரங்களும் வாகனங்களின் உரிமையை உறுதி செய்து கொள்ள பதிவு சான்றிதல்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வன முகாமைத்து வ செலவினம் | 1,645,340 | கொடுப்பனவு வவுசர்கள் | வன முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமொன்று தவறுதலாக ஆதன கிரயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த தவறு 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | குறித்த வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் செலவினம் சரியாக கணக்கீட செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்க ள் பதிவேடு | 15,906,831 | சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்படடிருந்த சொத்துக்களிற்கு உரியதாக விற்பனை இன்வொயிஸ் பத்திரம், பணிப்பாளர் சபை அங்கீகாரங்கள். | இந்த தவறு அச்சிடல் வழு காரணமாக இடம்பெற்ற ஒன்றாகும். 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது உரிய சீராக்கத்தை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வெண்டியதுடன் வித்தியாசங்களிற்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்க ள் மற்றும் உயிரியல் விஞ்ஞான சொத்துக்க ள் | 3,483,783,882 | மர மதிப்பீட்டு அறிக்கை, மரங்களிற்குரிய கள தொகை மதிப்பு அறிக்கை | நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காண்பித்துள்ள நுகர்வு உயிரியல் சொத்துக்கள் மற்றும் புரவலன் உயிரியல் சொத்துக்களின் பெறுமதிகள் உருவாகியுள்ள விதத்தை பரீட்சித்துப் பார்த்து அந்த சொத்துக்களை பௌதீகரீதியாக இனங்காண கன பரிசோதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | மர மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மரங்களிற்குரிய கள தொகை மதிப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | கடன்படுனர் மீதி | 46,610,451 | கடன்படுனர் பெயர் பட்டியல், விற்பனை இன்வொஸ் பத்திரம், குறித்த விற்பனை உடன்படிக்கை | 2019.12.31 திகதியன்று நிலவிய கடன்படுனர் தொடர்பாக மீதி உறுதிப்பாடுகளை அனுப்புமாறு அனைத்து கடன்படுனர்களுக்கும் அறிவிக்க வேண்டிய போதும் அதற்காக | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள தேவையான ஆவண சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பதில் கிடைக்காததால் நிறுவன லெஜர் மீதி சரியெனக் கருதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன | |
| (ஊ) | கடன்கொடுனர் மீதி மற்றும் கடன்படுனர் மீதி | 180,588,942 | மீதி உறுதிப்பாடு மற்றும் பின்னரான மீதி தீர்பனவு அறிக்கை | தேயிலை தரகர்களிற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 16,030,780 ஆன தொகை மற்றும் மூல தேயிலை கொழுந்து கொள்வனவாளர்கள் இடமிருந்து பெற்றிருந்த ரூபா 11,576,571 ஆன முற்பணத் தொகையை 2020 ஆண்டில் தீர்த்துள்ளதுடன் எஞ்சிய அனைத்து கடன்கொடுனர் மீதிகள் 2016 ஆண்டு மற்றும் அதற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மீதிகளாகும். 2021 நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய கடன்படுனர் மற்றும கடன்கொடுனர் மீதிகளிற்குரிய பின்னரான மீதி உறுதித் தீர்பனவு தொடர்பான விபரங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. | கடன்கொடுனர் மற்றும் கடன்படுனர் மீதிகளிற்காக மீதி உறுதிப்பாடு மற்றும் பின்னரான மீதி தீர்பனவு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | விஷேட கழிவு நட்டத்திற்கான ஒதுக்கம் ஐயக்கடன் ஒதுக்கம் | 49,128,419 | ஒதுக்கத்திற்கான கடன்படுனர் பதிவேடுகள், பணிப்பாளர் சபை அங்கீகாரங்கள் | இந்த மீதிகள் 2012 ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்பட்டவை ஆகையால் அப் பெறுமதி உருவான முறை தொடர்பாக பரீட்சித்துப் பாரத்து 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறித்த வெளிப்படுத்தல்களை நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | செயளற்ற மீதி | 1,933,043 | கொடுப்பனவு வவுசர்கள், குறித்த | நிதிநிலைமை கூற்றில் நடைமுறை | தேவையான சான்றுகளை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உடன்படிக்கைகள் | பொறுப்பினுள் உள்ளடங்கும் ரூபா 1,933,043 ஆன செயலற்ற கணக்கு மீதி 2012 ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மீதிகள் ஆகையால் இது தொடர்பாக பரீட்சித்து குறித்த கணக்கு செம்மையாக்கல்களை 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற் கொள்ளப்படும். | கணக்காய்விற்கு சமர்ப்பித்து குறித்த சீராக்கம் உரியவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஐ) | மீள் செலுத்த வேண்டிய டெண்டர் வைப்புக்கள் | 6,379,570 | குறித்த டெண்டர் கடிதக் கோவைகள் | இந்த வைப்புத் தொகை 2006 ஆண்டிற்கு முன்னரில் இருந்து முன்கொண்டு வரப்பட்ட மீதிகளாகும். தற்போது இந்த மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிக்க பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்றை 2021/01/25 திகதி அனுப்பியுள்ளதுடன் 2021 திசெம்பர் மாதம் இடம்பெற்ற கணக்காய்வு குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக நடடிக்கை எடுக்க குழுவொன்றை நியமிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதால், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | தேவையான சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பித்து குறித்த சீராக்கம் உரியவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 17,665,750 | செலவினத்திற்கான வவுசர் | பணிக்கொடைக்கான ஒதுக்க மீதியை கணக்கிடும் போது ஏனைய கொடுக்கல் வாங்கல்களாக கழித்துள்ள ரூபா 3,140,202 தொகை மற்றும் ரூபா 14,525,548 ஆன தொகை உருவான விதத்தை பரீட்சித்து தேவையான சீராக்கங்களை 2022 | தேவையான சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் மற்றும் குறித்த சீராக்கத்தை உரியவாறு செய்து கொள்ள வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | |
| (ஓ) | வியாபார பெற வேண்டியவைகள் | 3,567,597 | பணப் பெறுவனவுகளிற்கு உரியதான பற்றுச்சீட்டுக்கள் | 2022 ஆண்டில் இது தொடர்பாக பரீட்ச்சிதது குறித்த கணக்கு சீராக்கத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 169,015,969 ஆன கடன்படுனர் மீதிகளிலிருந்து, 03 இற்கும் 04 ஆண்டுகளும் இடையிலான மீதி ரூபா 1,199,583 தொகை அதாவது 0.7 சதவீதம் ஆனதடன், 05 ஆண்டுகளை விஞ்சியுள்ள மீதி ரூபா 83,908,608 அதாவது 50 சதவீதமானதுடன் இந்த கடன் மீதிகளை அறவிடுவதற்காக மீளாய்வாண்டிலும் ஆக்கபூர்வ செயல்முறைகள் இல்லாததன் மீது அறவிடுவதில் நிச்சியமற்றதன்மை நிலவியது. | அறவிடப்படாத கடன்படுனர் தொடர்பான விபரங்களை கண்டறிவதற்காக தற்போது அலுவலர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த விபரங்கள் கிடைத்த பின்னர் அந்த தொகையை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பது தொடர்பாக பரிந்துரை சமர்ப்பிப்பதற்காக இன்னும் ஒரு குழுவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் பரிந்துரை தொடர்பாக பணிப்பாளர் சபை தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இக் கடன் மீதிகளை தீர்ததுக்ககொள்ள போதிய செயல்முறைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2014 ஒக்டோபர் 15 திகதி கூட்டுத்தாபனத்தினால் உடன்படிக்கை கைச்சாதிடப்படாது ரூபா 6 மில்லியன் கடன் தொகையை எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு வழங்கியிருந்ததுடன், 2015 ஆண்டு முதல் கம்பனியினால் கடன் தொகை செலுத்துவதனை புறக்கணித்ததன் காரணமாக அறவிட வேண்டிய எஞ்சிய மீதியான ரூபா 1,916,092 தொகையிற்காக ஐயகடன் ஒதுக்க கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2014.10.15 திகதியளவில் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் வ/அ எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி ஆகிய இரண்டு நிறுவனங்களும் ஒரு தலைவரின் கீழ் காணப்பட்டதுடன், தலைவரின் அங்கீகாரம் மீது ரூபா 6 மில்லியன் எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு செலுத்தப்பட்டது. அத் தொகையிலிருந்து ரூபா 4.5 மில்லியன் அவ் ஆண்டினுள்ளே தீர்க்கப்பட்டதுடன், எஞ்சிய ரூபா 1.5 மில்லியன் தொகை இது வரை செலுத்தப்படவில்லை. அவ்வாறே, 2015 ஆண்டில் | இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு மற்றும் நிதிக்கூற்றுக்களில் போதிய ஒதுக்கீடுகளை செய்வதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் சாரதியொருவர் வ/அ எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியிற்கு இணைக்கப்பட்டதுடன் அதற்காக வ/அ எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 416,092 ஆகும். அதன் பிரகாரம் வ/அ எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 1,916,092 ஆவதுடன் அத் தொகை அறவிடுவதற்கு உதவுமாறு வரிசை அமைச்சிடமும் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. | |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்குரியதாக ஒபல்கல தோட்டத்தில் கூட்டுத்தொகை ரூபா 786,379 ஆன டெண்டர் வைப்பு, மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்கப்படாததால் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புகள் மிகையாக மதிப்பிடப்படும் அபாயம் நிலவியது. | இலக்கம் SLSPC/PL/TB/T-88/2010 மற்றும் இலக்கம் SLSPC/PL/TB/T-88/2011 ஆகிய மரங்களின் விற்பனை தொடர்பான டெண்டர்களுக்காக பெற்றுக் கொண்ட தொகை (திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை) மீள் செலுத்தப்படாதது அவ் வாடிக்கையாளர்களுக்கும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையே சில சிக்கலான நிலைமை காரணமாகவாகும். இந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டதன் பின்னர் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ள அல்லது அத் தொகையை கூட்டுத்தாபனத்தின் வருமானமாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த நீண்ட கால வைப்பு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தற்போது பாயன்படுத்த முடியாத பராதீனம் செய்யப்பட | நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களையும் இனங்காண தேவையான | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் பயன்படுத்த முடியாத வாகனங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 2(அ) பந்தி மற்றும் 02/2015 ஆம் இலக்க 2015 ஜுலை 10 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | வேண்டிய நிலையிலுள்ள 13 லொரிகள், 25 உழவு இயந்திரங்கள் மற்றும் டேலர்கள், 07 கார் வண்டிகள், 03 ஜிப் வண்டிகள் மற்றும் 04 பிணியாளர் வண்டிகள், 01 முச்சக்கர வண்டி மற்றும் 43 மோட்டார் சைக்கில்களை 2021 ஜுலை 09 திகதி வரையும் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை பிரகாரம் இயந்திர பொறியியளார் ஒருவர் அங்கம் வகிக்கும் குழுவொன்றின் மூலம் பராதீனம் செய்யப்பட வேண்டிய வாகனங்களை இனங்காண மற்றும் மதிப்பிடல் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் குறித்த சுற்றறிக்கை அறிவுருத்தல் பிரகாரம் வாகனங்களின் பராதீன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பராதீனம் செய்ய வேண்டும். |
| (ஆ) | 2009 நவம்பர் 13 திகதிய இலக்கம் 438 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 07 தேயிலை தொழிற்சாலைகள் 5 ஆண்டு முதல் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்காததுடன், மூடப்பட்டுள்ள இந்த தொழிற்சாலைகளில் காணப்படும் கட்டிடங்கள், இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன மூடப்பட்ட அக்காலப் பகுதியில் பயன்படுத்த முடியாதிருந்த போதும் அச்சொத்துக்களை பராதீனம் செய்ய அல்லது கூட்டுத்தாபனத்தை விடவும் இலாபகரமான முதலீட்டுச் செயற்பாட்டிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படாத இயந்திர உபகரணங்களை இனங்காண்பதனை 2022 ஆண்டினுள் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகில் காணப்படும் சொத்துக்களை மிகவும் இலாபகரமான முதலீட்டு செயன்முறையில் ஈடுபடுத்த அல்லது பராதீனம் செய்ய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 11 திகதிய இலக்கம் 01/2014 கொண்ட பொது நிதி | நிதியாண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு முன்னர் எதிர்வரும் நிதியாண்டின் | 2022 ஆண்டிற்காக வியாபார திட்டமொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது | தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் வியாபார திட்டமொன்றை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 5 (2) பந்தி மற்றும் 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் 12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பிரிவு | செயற்படுத்த எதிர்பார்க்கும் வணிக செயற்பாடுகள் உள்ளிட்ட வியாபார திட்டமொன்றை தயாரித்து பணிப்பாளர் சபை அங்கீகரித்த பின்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வியாபார திட்டத்தை பணிப்பாளர் சபையிக்கு முன்வைத்து அங்கீகாரம் பெற்ற பின்னர் அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஈ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தி | நிதியாண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு முன்னர் செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்து பணிப்பாளர் சபை அங்கீகரித்த பின்னர் வரிசை அமைச்சான பொது முயற்சிகள் மீதான அபிவிருத்தி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை | நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் 2022 ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த செயல் நடவடிக்கை திட்டத்தை பணிப்பாளர் சபையிக்கு முன்வைத்து அங்கீகாரம் பெற்ற பின்னர், அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (உ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.3 | செயலாற்றுகை அறிக்கை/ முன்னேற்ற அறிக்கையை தயாரித்து காலாண்டு, அரையாண்டு மற்றும் | நிறுவனத்தின் அனைத்து பணிகளும் உள்ளடங்கும் வகையில் 2022 ஆண்டிற்காக செயல் நடவடிக்கை | தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுகை திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 4.2.6 ஆம் பந்திகள் | வருடாந்தமாக சமர்ப்பிக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் அவ்வறிக்கைகளை தயாரித்திருக்கவில்லை. | திட்டமொன்றை தயாரித்த பின்னர், முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | 2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 பிரிவு | வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை நிதியாண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு முன்னர் தயாரித்து பணிப்பாளர் சபை அங்கீகரித்த பின்னர் வரிசை அமைச்சான பொது முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மூலதன வரவு செலவுத் திட்டத்தை 2019 பெப்ரவரி 14 திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்திருந்த போதும் 2021 பெப்ரவரி 08 திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்தது. | 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்கான வரவு செலவு திட்டத்தை தயாரித்து உரியவாறு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் வரவு செலவு திட்டத்தை தயாரித்து அங்கீகரித்துக் கொண்ட பின்னர் உரிய தரப்பினர்களிற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (எ) | 2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிறுவனத்திற்குரிய வருடாந்த கணக்குகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போது, மீளாய்வாண்டின் கூட்டுத்தாபன கணக்குகள் | 2020 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்துள்ளதுடன், 2021 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2022.02.25 திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த கணக்குகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய காலப் பகுதியினுள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 2020 பெப்ரவரி 25 திகதி ஆவதுடன், அதன் போது கணக்குளை சமர்ப்பிக்க வேண்டிய காலம் ஓராண்டை கடந்திருந்தது. | | |
| (ஏ) | 2015 ஜுலை 14 திகதிய இலக்கம் 3/2015 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை | நிமித்த கட்டுநிதியை பெற்று உரிய பணி முடிவடைந்து 10 நாட்களில் அந்த கட்டுநிதியை தீர்க்க வேண்டிய போதும், 2019 ஆண்டில் 14 அலுவலர்கள் 50 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்ட ரூபா 342,540 ஆன உப கட்டுநிதியை தீர்ப்பதற்கு 11 நாட்கள் முதல் 321 நாட்கள் வரையான காலம் வீச்சளவில் தாமதித்திருந்தனர். | 2019 ஆண்டிற்குரிய உபகட்டுநிதியை தீர்ப்பதில் தாமதமொன்று ஏற்பட்டுள்ளது. அவ்வாறாயினும், 2022 வருட ஆரம்பம் முதல் அவ்வறான தாமதங்களை தவிர்த்துக் கொள்ள இயலுமாகவுள்ளது. | பணிகள் முடிவடைந்த உடனே சுற்றறிக்கை பிரகாரம் உப கட்டுநிதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 1995 ஜுலை 25 திகதிய சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் எஸ்ஏஜ/ஏ/01/34 கொண்ட அரச காணிகள் ஒப்படைப்பு தொடர்பான வழிகாட்டியின் 9 (ஆ) பிரிவு | 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை முன்னர் தீர்மானித்திருந்த குத்தகை தொகையின் 150 சதவீதத்திற்கு குறையாதவாறு குத்தகை வாடகையை மீள்திருத்தாமை மற்றும் அரச மதிப்பீட்டை விட குறைந்த பெறுமதியை வருடாந்த குத்தகை வாடகையாக கருதிய காரணத்தால் மீளாய்வாண்டு இறுதியில் ஓபல்கல பெருந்தோட்டத்தில் 01 ரூட் 39.07 பர்சஸ் யை டயலொக் புரோட்பேன்ட் தனியார் கம்பனிக்கு மற்றும் ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டத்தின் மற்றும் கம்மடுவ அரச பெருந்தோட்டத்தின் சுயாதீன ரூபவாஹினி | டயலொக் புரோட்பேன்ட் தனியார் கம்பனிக்கு ஓபல்கல பெருந்தோட்டத்தில் 01 ரூட் 39.07 பர்சஸ் அளவை 2000.01.01 திகதி முதல் 30 ஆண்டுகளிற்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளது. குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் நிபந்தனை பிரகாரம் 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை அத் தொகை 50% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.<br><br>2022 ஆண்டிற்குரிய தொகை தற்போது பெறப்பட்டுள்ளது.<br><br>கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கம்மடுவ பெருந்தோட்டத்தில் 2 ரூட் 2.87 பர்சஸ் மற்றும் ஹுன்னஸ்கிரிய பெருந்தோட்டத்தில் 2 ரூட் | தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் அரச மதிப்பீட்டு பெறுமதிக்கு இணங்க வருடாந்த குத்தகை வாடகையை தீர்மானித்தல் மற்றும் 150 சதவீதத்திற்கு குறையாதவாறு குத்தகை வாடகையை 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மீள்திருத்த வேண்டியதுடன் புதிய குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடவும் நிலுவை குத்தகை தொகையை மற்றும் பாதை பராமரிப்பு தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கிய காணிகளிலிருந்து ரூபா 18,482,000 ஆன குத்தகை தொகையும் பாதை பராமரிப்பு தொகையாக கிடைக்க வேண்டிய ரூபா 2,484,000 தொகையும் கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தன. | 2.01 பர்சஸ் சுயாதீன ரூபவாஹினி நிறுவனத்திற்கு 1996 ஆண்டு குத்தகை வழங்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவில்லை. அதனால் பெருந்தோட்ட அமைச்சின் உதவியுடன் இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஒ) | 2015 மே 25 திகதிய இலக்கம் 1/2015 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | MM-1 குழுவிற்குரிய அலுவலரிற்கு வாகன படிகள் உரித்தற்ற போதும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டினுள் மூன்று அலுவலர்களிற்கு ரூபா 1,350,000 ஆன உத்தியோகபூர்வ வாகன படிகள் மற்றும் ரூபா 224,760 ஆன எரிபொருள் படியையும் வழங்கியிருந்தது. | நிறுவனத்தின் MM குழுவிற்குரிய அனைத்து அலுவலர்களினதும் பொக்குவரத்து படிகள் மற்றும் எரிபொருள் படிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. | தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சுற்றறிக்கைக்கு முரணான கொடுப்பனவுகளை அறவிட நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் 3.2.1 பிரிவு | தலைவரின் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 170 லீற்றர் ஆன போதும் அந் எல்லையை விஞ்சி ஆண்டினுள் எரிபொருள் 679 லீற்றர் பெற்றுக் கொண்டிருந்த போதும் அதற்காக பணிப்பாளர் சபை பரிந்துரையுடன் உரிய வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நிறுவனத்தின் தலைவரினால் பெற்றுக் கொண்டுள்ள மேலதிக எரிபொருளுக்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் உரிய வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது பெற்றுக் காண்ட எரிபொருளுக்குரிய செலவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் | 2006 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 421,921,940 ஆன ஊழியர் சேமலாப நிதியத்தின் பொறுப்பும் மற்றும் ரூபா 14,380,082 ஆன ஊழியர் நம்பிக்கை | நிறுவனம் பல காங்கலாக முகம் கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக ஊழியர் சேமலாப பொறுப்பு தொகை, ஊழியர் நம்பிக்கை நிதிய பொறுப்பு தொகை மற்றும் ஊழியர் பணிக்கொடை | இந்த நிலுவை பொறுப்பு தொகையை செலுத்துவதற்காக ஆக்கபூர்வ நிகழ்ச்சித்திட்மொன்று தாமதமின்றி தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் ii ஆம் பகுதியின் 16 (i) ஆம் பிரிவு | நிதிய பொறுப்பும் மீளாய்வாண்டின் இறுதி வரை கொடுப்பனவு செய்வதற்குற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், இதனால் 2019 ஆண்டளவில் கூட்டுத்தாபனத்திற்கு மொத்தம் ரூபா 43,215,912 ஆன மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்தது. | தொகை உரியவாறு செலுத்த முடியாமல் இருந்தமையால் இந்த மிகை அறவீடு தொகையை செலுத்த வேண்டியதாகவுள்ளது. இந்த நிலுவை தொயைை தீர்ப்பதற்காக பொது திறைசேரியிலிருந்து பணம் கிடைத்ததன் பின்னர் குறித்த கொடுப்பனவை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (க) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைகள் கொடுப்பனவு சட்டத்தின் ii ஆம் பகுதியின் 5 (1) உப பிரிவு | ஊழியர் ஒருவர் இளைப்பாறி அல்லது மரணித்த திகதி முதல் 30 நாட்களிற்குள் பணிக்கொடை கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு பணிக்கொடை தொகை உரிய திகதிக்கு செலுத்தாததன் காரணத்தால் 2019 ஆண்டிறுதியிளவில் ரூபா 14,525,548 ஆன மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்தது. | நிறுவனம் பல காங்கலாக முகம் கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக ஊழியர் சேமலாப பொறுப்பு தொகை, ஊழியர் நம்பிக்கை நிதிய பொறுப்பும் மற்றும் ஊழியர் பணிக்கொடை தொகை உரியவாறு செலுத்த முடியாமலிருந்தமையால் இந்த மிகை அறவீட்டு தொகை செலுத்த வேண்டியதாகவுள்ளது. இந்த நிலுவை தொகை தீர்ப்பதற்காக பொது திறைசேரியிலிருந்து பணம் கிடைத்ததன் பின்னர் குறித்த கொடுப்பனவு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை பணிக்கொடை தொகையை செலுத்துவதற்காக ஆக்கபூர்வ நிகழ்ச்சித்திட்மொன்று தாமதமின்றி தயாரிக்கப்பட வேண்டும். |

**1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை**

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கு உட்பட்ட ரூபா 32,201,293 ஆன தேயிலை விற்பனை வருமானம் தேசத்தைக் கட்டியெழுப்பும வரி கணக்கிடலில் கவனத்திற் கொள்ளாததன் காரணமாக ரூபா 644,025 இனால் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் செலவு குறைந்திருந்தது. | நிறுவனம் சில காலமாக எதிர்நோக்கும் நிதிப் நெருக்கடி காரணமாக தேயிலை விற்பனை வருமானத்தின் மீது செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் தொகையை தீர்க்க முடியாதுள்ளது. | தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்கு உட்பட்ட அனைத்து வருமானமும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி கணக்கிடலில் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வரிக்குட்படும் விற்பனை ரூபா 3 மில்லியனை விஞ்சுகின்ற அனைத்து நிறுவனங்களும் 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரிவு 02 மற்றும் 03 இன் பிரகாரம் சுயமாக பதிவு செய்ய வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் அவ்வாறு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த வரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் இது தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அது தொடர்பாக கிடைக்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்வதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரிவு 2 (இ) இன் பிரகாரம் ஏனைய வருமானத் தலைப்புகளின் கீழ் பெறப்படும் வருமானம், வரிக்கு உட்பட்ட வேண்டிய போதும் ரூபா 106,974,735 ஆன ஏனைய வருமானங்கள் முழுமையாக தேசத்தை கட்டியெழுப்பும் வரி கணக்கீட்டிற்காக கவனத்திற் கொள்ளாமல் ரூபா 2,139,494 ஆன வரி செலுத்துதல்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. | நிறுவனம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த வரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் இது தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அது தொடர்பாக கிடைக்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் ஏனைய வருமானத் தலைப்பின் கீழ் பெறப்படும் வருமானம் தேசத்தை கட்டியெழுப்பும் வரி கணக்கிடலின் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டத்தின் 113 ஆம் பிரிவின் பிரகாரம் தனிநபர் அல்லது கூட்டுமுயற்சி ஒன்று சுய மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு காலாண்டு முடிவில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு முறையே ஆகஸ்ட் 15, நவம்பர் 15, பெப்ரவரி 15 மற்றும் அடுத்துவரும் ஆண்டு மே 15 திகதி அல்லது அதற்கு முன் எஞ்சிய வரி தொகை இருப்பின் அதனை அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 அல்லது அதற்கு முன் செலுத்த வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் 2019/2020 மதிப்பீட்டிற்குரிய வருமான வரியை 2021 ஏப்ரல் 22 திகதியளவிலும் | நிறுவனம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த வரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் இது தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அது தொடர்பாக கிடைக்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இறைவரி (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் வருமான வரி கணக்கிடலை கணக்கீடு செய்தல் மற்றும் குறித்த அறிக்கையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தி இருக்காததுடன் வருமான வரி பொறுப்பும் கணக்கிடப்படவில்லை. | | |
| (உ) | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 106 இன் பிரகாரம் வருமான வரி அறிக்கையை அடுத்த ஆண்டு நவம்பர் 30 அல்லது அதற்கு முன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் 2019/2020 மதிப்பீட்டு ஆணடிற்குரிய வருமான வரியை 2021 ஏப்ரல் 22 திகதியளவிலும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைத்திருக்கவில்லை. | நிறுவனம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி இருந்த வரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் இது தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அது தொடர்பாக கிடைக்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இறைவரி (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் குறித்த அறிக்கையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் பிரிவுகள் 02 மற்றும் 06 இன் பிரகாரம் ஒரு காலாண்டில் வருமானம் ரூபா 10 மில்லியனிலும் அதிக வருமானம் கொண்ட ஒவ்வொரு நிறுவனமும் வரிக்கு உட்பட்ட வேண்டிய போதும் மீளாய்வாண்டிற்குரியதாக கூட்டுத்தாபனம் ரூபா 1,339,832 ஆன பொருளாதார சேவைக் கட்டணத்தை செலுத்த நடவடிக்கை எடுத்திருக்காததுடன் காலாண்டு முடிவடைந்து அடுத்துவரும் மாதம் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பொருளாதார சேவைக் கட்டணத்தை செலுத்த வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் 2012 ஆம் ஆண்டு முதல் 2019 நிதியாண்டு வரை அறிக்கைகளை ஒப்படைத்து அல்லது கட்டணம் செலத்தியோ இருக்கவில்லை. | நிறுவனம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த வரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் இது தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அது தொடர்பாக கிடைக்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் பிரகாரம் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட மற்றும் பணம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 329,884,391 ஆன நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 147,798,507 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 182,085,884 ஆன நட்டத்தின் அதிகதரிப்பு அவதானிப்பட்டது. இந்த நட்டம் அதிகரிப்பிற்கு கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் மூலத் தேயிலை கொழுந்து மற்றும் இறப்பார் விற்பனை வருமானம் முறையே ரூபா 84,126,292 இனால் மற்றும் ரூபா 1,221,536 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டின் பங்களிப்பு ரூபா 213,603,074 ஆனதுடன், 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 256,171,541 ஆனது. அதாவது 20 சதவீத வளர்ச்சியொன்று பெறப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது முடிவடைந்த தேயிலை மற்றும் மூல தேயிலை கொழுந்து விற்பனை வருமானம் அதிகரித்தமையால் பங்களிப்பில் 96 சதவீதத்தால் அதாவது ரூபா 502,277,402 வரை அதிகரிப்பொன்றை காண்பித்து 2018 ஆண்டில் மூல தேயிலை கொழுந்து மற்றும் இறப்பர் வருமானம் குறைவடைந்தமையால் பங்களிப்பு 14 சதவீதத்தால் அதாவது ரூபா 430,855,881 வரை குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் மூல தேயிலை கொழுந்து மற்றும் இறப்பர் வருமானம் குறைவடைந்தமையால் பங்களிப்பு 26 சதவீதத்தால் அதாவது ரூபா 317,764,114 வரை குறைவடைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| | 2019 (ரூபா) | 2018 (ரூபா) | அதிகரித்தல் / (குறைதல்) (ரூபா) |
|---|---|---|---|
| வருமானம் | 535,933,037 | 597,950,423 | (62,017,386) |
| ஏனைய வருமானம் | 106,974,735 | 115,508,842 | (8,534,107) |
| விற்பனை கிரயம் | (786,607,907) | (720,501,111) | 66,106,797 |
| நிர்வாக செலவினம் | (165,473,851) | (128,666,247) | 36,807,605 |
| நிதிசார் செலவினம் | (20,710,404) | (12,090,415) | 8,619,988 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீயாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் நடைமுறை சொத்து விகிதம் 0.20 : 1 ஆனதுடன் விரைவு சொத்து விகிதம் 0.15 : 1 ஆனது. மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் தலைமை அலுவலகத்தில் மற்றும் பெருந்தோட்டங்களில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி முறையோ ரூபா 1,318,555,797 மற்றும் ரூபா 1,091,072,027 ஆனமை நடைமுறை சொத்து மற்றும் விரைவு சொத்து விகிதங்கள் வீழ்ச்சி அடைவதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

(ஆ) 2019 ஆண்டில் மொத்த வருமான விகிதம் மற்றும் தேறிய நட்டம் முறையே 47 சதவீதம் மற்றும் 62 சதவீதமானதுடன் கடந்த ஆண்டில் அந்த விகிதங்கள் முறையே 20 சதவீதம் மற்றும் 25 சதவீதமானதால் மீளாய்வாண்டில் அந்த விகிதம் முறையே 27 சதவீதத்தால் மற்றும் 37 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 பெருந்தோட்டங்களில் 782 பர்சஸ் அளவான நிலம் மற்றும் 5 உத்தியோகபூர்வ இல்லங்கள் 50 வருடகாலமாக அனுமதியற்ற வதிவாளர்கன் பயன்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது. | 12 பெருந்தோட்டங்களில் அனுமதியற்ற வதிவாளர்களாக குடியேரியுள்ளவர்களிற்கு இடையில் கோமர அரச பெருந்தோட்டத்தில் காணி | அனுமதியற்ற வதிவாளர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தி அந்த பிரச்சினையை |

| | | | |
|---|---|---|---|
| | | மீண்டும் கையேற்கப்பட்டுள்ளது. வலஹந்தூவ பெருந்தோட்டத்தில் அனுமதியின்றி குடியேரியுள்ள காணிகள் தொடர்பாக காலி சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்பிற்கு எதிராக தரப்பினரால் உச்ச நீதிமன்றத்திற்கு முறைபாடொன்றை முன்வைத்துள்ளனர். ஏனைய அனைத்து தோட்டங்களிலும் அனுமதியற்ற வதிவாளர்களை அகற்றுவதற்கு குறித்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஓபல்கல தோட்டத்தில் 39.07 பர்சஸ் டயலொக் புரோட்பேன்ட் தனியார் கம்பனிக்கு அரச மதிப்பீட்டு பெறுமதியிலும் குறைத்து வழங்கியதன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 712,500 ஆன நட்டமும், உப குத்தகை அடிப்படையில் வழங்கியதால் கிடைக்க வேண்டிய ரூபா 427,500 ஆன தொகையொன்றும் இழக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தினால் குத்தகை வழங்கியுள்ள காணி மற்றும் அந்த குத்தகை ஒப்பந்தம் தொடர்பாக மீண்டும் பரிசீலணை ஒன்றை ஆரம்பித்துள்ளதுடன் அந்த பரிசீலணையில் வெளிப்பத்தப்படும் விபரங்கள் பிரகாரம் அது தொடர்பாக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையை திருத்த அல்லது நிலுவை குத்தகை பணத்தை அறவிட தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (இ) | 1996 ஆண்டு முதல் சுயாதீன தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள ஹுன்னஸ்கிரிய அரச தோட்டத்தின் ரூட் 02 பர்சஸ் 01 நிலம் மற்றும் கம்மடுவ அரச தோட்டத்தின் ரூட் 02 பர்சஸ் 2.87 இற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு 1996 ஆண்டில் குத்தகை வழங்கியுள்ள இந்த நிலம் தொடர்பாக குத்தகை உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவில்லை. அந்த நிறுவனத்தை குத்தகை உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட இணக்கிக் கொள்வதற்காக அந்த நிறுவனத்திற்கு 2020.12.23 மற்றும் 2021.10.22 திகதியளவில் கடிதம் அனுப்பியுள்ளதுடன் அது தொடர்பாக இது வரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. அதனால் பேருந்தோட்ட அமைச்சின் உதவியுடன் இந்த பிரச்சினையை தீர்த்துக் | விரைவில் குறித்த நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஈ) | பிரயாண முடிவில் பயணித்த அலுவலர்கள் வாகன ஓட்டக் குறிப்பில் கையொப்பமிட்டு இருக்காததுடன் தின ஓட்டக் குறிப்பு தினந்தோறும் எரிபொருள் சமப்படுத்த வேண்டிய போதும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 04 வாகனங்களிற்குரிய ஓட்டக் குறிப்பினுள் தினந்தோறும் எரிபொருள் சமப்படுத்தி இருக்கவில்லை. | இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சாரதிகளை அழைத்து எச்சரிக்கை வழங்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தும் அநேகமான வாகனங்கள் 35 ஆண்டுகள் அளவு பழையனவாவதுடன் அந்த வாகனங்களில் மைலோ மீற்றர் உரியவாறு செயற்படுவதில்லை. அதனால் அந்த வாகனங்களின் மைலோ மீற்றர்களை உரியவாறு திருத்தி அதன் பிரகாரம் எரிபொருள் சமப்படுத்தலை மேற்கொள்ளுமாறு அனைத்து சாரதிகளையும் அறிவூட்டியுள்ளதுடன், அந்த பணிகள் உரியவாறு இடம்பெறுகின்றனவா என்பது தொடர்பாக போக்குவரத்து பிரிவின் அலுவலர்களினால் மேற்பார்வை செய்யப்படும். | வாகன ஓட்டக் குறிப்புக்களை உரிய அலுவலர் மூலம் கையொப்பமிட்டுக் கொள்ள மற்றும் எரிபொருளை சமப்படுத்த நடவடிக்கை எடுக்க வெண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பேருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் தரவுகளின் பிரகாரம், 2019 ஆண்டில் இலங்கையில் ஒரு ஹெக்டயாரிற்கு நியம வருடாந்த முடிவு தேயிலை அறுவடை 1482 கிலோ கிராம் ஆன போதும், கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் 13 பெருந்தோட்டங்களில் அந்த அறுவடை கிலோ கிராம் 174 இற்கும் 727 இற்குமிடையில் குறைந்த வீச்சளவில் காணப்பட்டது. | பெருத்தோட்ட கைத்தொழில் அமைச்சின் தரவுகளின் பிரகாரம் 2017 ஆண்டில் இலங்கையில் ஒரு ஹெக்டயாரிற்கு நியம வருடாந்த பூர்த்தியான தேயிலை அறுவடை 1595 கிலோ கிராம் என வரைவு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த போதும், அந்த அமைச்சின் புள்ளி விபரங்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்குரிய கூட்டுத்தானத் துறையில் (Corporate Sector) ஒரு ஹெக்டயாரிற்கு நியம பூர்த்தியான தேயிலை அறுவடை கிலோ கிராம் 1018 என அறிவிக்கிறோம். அவ்வாறாயினும் 2019 ஆண்டில் | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பெருந்தோட்டங்களில் அறுவடையை துறையில் நியம நியாயமான அறுவடைக்கு சமாந்திரமாக பேணிக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பெருந்தோட்டங்களில் பூர்த்தியான தேயிலை அறுவடை கிலோ கிராம் 174 – 727 இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 4222 ஹெக்டயார் தேயிலை பயிர்செய்கை காணப்பட்ட போதும் அவற்றில் 2883 ஹெக்டயார்கள் 100 ஆண்டுகளை விடவும் பழைய தேயிலை பயிர்களாவதுடன் 135 ஹெக்டயார்கள் மாத்திரம் மீண்டும் தேயிலை பயிரிடலிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | வரைவு அறிக்கையில் 100 ஆண்டுகளை விடவும் பழைய தேயிலை பயிர்கள் ஹெக்டயார் 4086 ஆக குறிப்பிட்டுள்ள போதும் நிறுவன கோவைகளின் பிரகாரம் அந்த அளவு ஹெக்டயார் 2883.31 என அறிவிக்கிறோம். நிறுவனம் முகம் கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக பழைய தேயிலை பயிர்களை அகற்றி மீண்டும் பயிரிடலை ஆரம்பிக்க முடியாதுள்ளது. எவ்வாறாயினும் 2022 ஆண்டில் பொது திறைசேரியின் நிதியத்தின் கீழ் 180 ஹெக்டயார்களில் மீண்டும் தேயிலை மீண்டும் பயிரிட தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | மிகப் பழைய பயிர்களை அகற்றி அறுவடை அதிகமான மீள் பயிரிடலில் ஈடுபட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபன வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 2017 முதல் 2018 ஆண்டளவில் கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்படும் 13 தோட்டங்களில் 11 தோட்டங்களில் தேயிலை கொழுந்து உற்பத்தி அதிகரிக்கும் போது அலகொள்ள, கல்பீள்ள, கோமர, ஹுன்னஸ்கிரிய மற்றும் கெளேபொக்க ஆகிய ஐந்து தோட்டங்களில் தேயிலை கொழுந்து உற்பத்தி முறையே 1 சதவீத்தால் மற்றும் 9 சதவீத வீச்சளவில் குறைவடைந்து இருந்ததுடன் 2018–2019 காலத்தினுள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனைத்து தோட்டங்களிலும் உற்பத்தி 2 சதவீதம் முதல் 33 சதவீத வீச்சளவால் வீழ்ச்சியடைந்திருந்தது. கூட்டுமொத்த உற்பத்தி 170,627 கிலோ கிராம் அதாவது 11.58 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | 2017 ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆண்டில் அலகொள்ள, கல்பீள்ள, கோமர, ஹுன்னஸ்கிரிய மற்றும் கெளேபொக்க ஆகிய தோட்டங்களில் தேயிலை கொழுந்து உற்பத்தி குறைவடைந்துள்ளது என ஏற்றுக் கொள்கிறோம். அவ்வாறாயினும் 2018 ஆண்டிற்கு ஒப்பாக 2020 ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மொத்த பூர்த்தி தேயிலையின் உற்பத்தி 11% இனாலும், 2021 ஆண்டில் 14% இனாலும் அதிகரித்துள்ளது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களில் தேயிலை அறுவடையை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வெளி தோட்டதாரர்களிற்கு வழங்கியிருந்த 1391 ஹெக்டயாரில் உற்பத்தி செய்திருந்த மொத்த பூர்த்தியான தேயிலை உற்பத்தி 2018 ஆண்டில் 102,507 கிலோ கிராம் ஆனதுடன் அது 2019 ஆண்டில் 99,850 கிலோ கிராம் ஆனதுடன் பேருந்தோட்ட அமைச்சினால் சமர்ப்பித்திருந்த தேயிலை கைத்தொழிலில் தரவுகளின் பிரகாரம் மேற்படி நில அளவின் வருடாந்த மொத்த பூர்த்தியான தேயிலை உற்பத்தி 2,061,462 கிலோ கிராம் ஆன போதும் வெளி பெருந்தோட்டதாரர்களால் உற்பத்தி செய்திருந்தது மொத்த அறுவடையில் 5 சவவீத அளவொன்றானது கருத்து முறனான விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது. | 2019 ஆண்டிறுதியில் வெளி தோட்டதாரர்களிற்கு வழங்கியிருந்த தேயிலை காணி அளவு 1391 ஹெக்டயார்களாகும். 2018 ஆண்டில் வெளி தோட்டதாரர்களின் தேயிலை கொழுந்துகளிற்குரிய பூர்த்தியான தேயிலை உற்பத்தி 102,507 கிலோ கிராமாவதுடன் 2019 ஆண்டில் அந்த அளவு 99,850 கிலோ கிராம் என ஏற்றுக் கொள்கிறோம். (பெறுந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் கூட்டுத்தாபன துறையில் ஒரு ஹெக்டயாரிற்கு பூர்த்தியான தேயிலை அறுவடை 1018 ஆகும்.) அவ்வாறாயினும் வெளி தோட்டதாரர்களின் பூர்த்தியான தேயிலை உற்பத்தி 2018 ஆண்டிற்கு ஒப்பாக 2020 ஆண்டில் 54% இனாலும், 2021 ஆண்டில் 66% இனாலும் அதிகரித்துள்ளது. | தேயிலை கைத்தொழிலின் வருடாந்த நியம மொத்த பூர்த்தியான தேயிலை உற்பத்தி மற்றும் அடைந்து கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அறுவடை குறைவதற்கான காரணத்தை தாமதமின்றி புலனாய்வு செய்ய வெண்டும். |
| (உ) | புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2018/2019 ஆண்டிற்குரியதாக வெளியிட்டிருந்த தரவுகளின் பிரகாரம் இலங்கையில் தேயிலை ஒரு கிலோ கிராமின் சாதாரண உற்பத்தி கிரயம் ரூபா 484 ஆக இருக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனம் நிர்வகிக்கும் 11 தோட்டங்களின் ஒரு கிலோ கிராம் தேயிலை உற்பத்தியின் கிரயம் ரூபா 416 – 783 ஆன வீச்சளவில் நிலவின. மேலும் பாதீட்டு அறிக்கையின் பிரகாரம் ஒரு கிலோ கிராம் தேயிலையின் மதிப்பீட்டு உற்பத்தி கிரயம் ரூபா 461 ஆவதுடன் உள்ளவாறான உற்பத்தி கிரயம் ரூபா 605 ஆகவிருந்தது. | வரைவு அறிக்கையில் குறிப்பிடப்படும் தரவுகள் சரியானதாகும். | உற்பத்தி கிரயத்தை குறைத்துக் கொள்ளவதனூடாக விற்பனை பங்களிப்பை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தேயிலை ஏற்றுமதி சங்கத்தினால் 2019 ஆண்டிற்குரியதாக இணயத்திற்கு வெளியிட்டிருந்த தரவுகளின் பிரகாரம் தேயிலை ஒரு கிலோ கிராமின் நியம சாதாரண விற்பனை பெறுமதி ரூபா 550 ஆக இருக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தின் அப்பெறுமதி ரூபா 340 இற்கும் ரூபா 415 இற்கும் இடையிலான | வரைவு அறிக்கையில் குறிப்பிடப்படும் தரவுகள் சரியானதாகும். | விற்பனை விலையை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்த வீச்சளவில் நிலவியது. | | |
| (எ) | கூட்டுத்தாபனத்தின் 13 தோட்டங்களிற்குரியதாக மொத்த நில அளவு ஹெக்டயார் 11,132 ஆன போதும், அவற்றில் தேயிலைக்காக 4,223 ஹெக்டயார்கள் மற்றும் இறப்பரிற்காக 2577 ஹெக்டயார்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய 4332 ஹெக்டயார் காணி அதாவது 39 சதவீதம் எவ்வித வருமானமும் ஈட்ட பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | கூட்டுத்தாபனத்தின் 13 தோட்டங்களிற்குரிய மொத்த நில அளவு ஹெக்டயார் 11,132 ஆகும். அவற்றில் 4,223 ஹெக்டயார்களில் தேயிலை பயிர்கள் காணப்படுவதுடன் இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களிற்காக ஒதுக்கப்பட்டுள்ள அளவு 2,577 ஹெக்டயார்கள் ஆகும். எஞ்சிய அளவான 4,332 ஹெக்டயார் நில அளவின் அதிக சதவீதம் அமைந்துள்ளது நக்கில்ஸ் வனப் வலயத்தில் ஆவதுடன், எஞ்சிய நில அளவு பாதைகள், கட்டிடங்கள் மற்றும் கற்பாறைகளுடனான நிலமாகும். | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | கூட்டுத்தாபனத்தின் தேயிலை உற்பத்தி நில அளவு 4,223 ஹெக்டயார் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்ய வேண்டிய நியம பூர்த்தியான தேயிலை அளவு கிலோ கிராம் 6,273,306 ஆக வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்திருந்த பூர்த்தியான தேயிலை அளவு 1,402,979 கிலோ கிராம ஆகும். அதாவது நியம அறுவடையின் 22 சதவீத அளவான மிகவும் திருப்திகரமற்ற அறுவடையாகும். | பேருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களின் படி கூட்டுத்தாபனத் துறையில் 2019 ஆண்டிற்குரிய அங்கீகார பூர்த்தியான தேயிலை அறுவடை ஒரு ஹெக்டயாரிற்கு கிலோ கிராம் 1,018 ஆகும். அதன் பிரகாரம் 2019 ஆண்டிற்குரிய நியம பூர்த்தியான தேயிலை உற்பத்தி கிலோ கிராம் 4,309,194 ஆவதுடன் கூட்டுத்தாபனத்தின் உள்ளவாறான தேயிலை உற்பத்தி 1,402,979 கிலோ கிராமாகும். அந்த அளவு சதவீதமாக எடுக்கும் போது நியம உற்பத்தியின் 32.63% ஆகும்.<br><br>2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய தேயிலை காணி நில அளவு முறையே ஹெக்டயார் 4,189 மற்றும் 4,199 ஆகும். பேருந்தோட்ட அமைச்சின் | கூட்டுத்தாபனத்திற்கு சொத்தமான தோட்டங்களின் மூலம் குறைந்த பட்சம் அங்கீகார சாதாரன அறுவடையை ஏனும் பெற்றுக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புள்ளிவிபரங்களின் படி கூட்டுத்தாபனத் துறையில் 2019 ஆண்டிற்குரிய நியம பூர்த்தியான தேயிலை அறுவடை கிலோ கிராம் 1,018 ஆவதுடன் அதன் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய கூட்டுத்தாபனத்தின் நியம பூர்த்தியான தேயிலை உற்பத்தி முறையே கிலோ கிராம் 4,264,402 மற்றும் 4,274,582 ஆகும். கூட்டுத்தாபனத்தின் 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய பூர்த்தியான தேயிலை அறுவடை முறையே கிலோ கிராம் 1,742,360 மற்றும் 1,803,226 ஆவதுடன் அதன் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மொத்த பூர்த்தியான தேயிலை உற்பத்தி அங்கீகார பூர்த்தியான தேயிலை உற்பத்தியின் சதவீதமாக முறையே 40.86% மற்றும் 42.18% வரை அதிகரித்துக் கொள்ள முடியுமாவுள்ளது. | |
| (ஐ) | மீளாய்வாண்டிற்காக ஒவ்வொறு தோட்டங்களிற்கும் வழங்கியிருந்த உற்பத்தி இலக்குகளிற்கிடையில் கோமர மற்றும் கல்பீள்ள தோட்டம் தவிர எஞ்சிய அனைத்து தோட்டங்களிலும் செயலாற்றுகை 75 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஹெயார்பார்க் மற்றும் வெயிதலாவ ஆகிய தோட்டங்கள் 45 சதவீதத்திலும் குறைந்த செயலாற்றுகையை காண்பித்திருந்தன. ஏனைய தோட்டங்கள் இன்னும் 50 சதவீதத்திற்கும் 68 சதவீதத்திற்கும் இடையில் குறைந்த செயலாற்றுகை மட்டத்தில் நிலவின. | வரைவு அறிக்கையில் குறிப்பிடப்படும் தரவுகள் சரியானதாகும். | உற்பத்தி இலக்குக்காக திட்டம் தயாரித்து அந் இலக்குகளை அடைந்து கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் பசளை கொள்வனவிற்காக வரவு செலவு திட்டத்தால் ரூபா 60 மில்லியன் ஒதுக்கியிருந்த போதும் உள்ளவாறாக ரூபா 3.56 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அது வரவு செலவு திட்ட அளவின் 6 சதவீதம் மாத்திரமாகும். | 2019 ஆண்டிற்காக எதிர்பார்த்தவாறு வருமானம் கிடைக்காத காரணத்தால் பசளை கொள்வனவு செய்தலை போதியளவில் மேற்கொள்ள முடியாதுள்ளது. | நடைமுறை சாத்தியமான வரவு செலவு திட்டத்தை தயாரிக்க மற்றும் வரவு செலவு திட்ட இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஓ) | 2013 ஆண்டில் ரூபா 852,397 ஆக இருந்த இலாபம் 2014 ஆண்டில் ரூபா 3,177,798 ஆன நட்டமாக மாற்றமடைதிருந்ததுடன் 2019 ஆண்டில் அந்த நட்டம் ரூபா 7,817,916 வரை வளரச்சியடைந்து இருந்தது. | அதிக காலமாக நிறுவனத்தின் வருமானம் போதியளவில் கிடைக்காத காரணத்தால் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. | வருமானத்தை வளர்த்துக் கொள்ள மற்றும் செலவுகளை குறைத்துக் கொள்ள தேவையான திட்டத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டும். |
| (ஓ) | கைத்தொழிலின் நியமங்களின் பிரகாரம் வலஹன்தூவ தோட்டத்தில் 65 ஹெக்டயார் நில அளவில் காணப்பட வேண்டிய சாதாரண இறப்பர் கன்றுகளின் எண்ணிக்கை 32,500 ஆன போதும் இறப்பர் கன்றுகளின் எண்ணிக்கை 18,634 ஆகும். அது இருக்க வேண்டிய அளவின் 57 சதவீதமாவதுடன் 2019 ஆண்டினுள் ஒரு ஹெக்டயாரிற்கு சராசரி இறப்பர் உற்பத்தி 667 கிலோ கிராமான போதும் வலஹன்தூவ தோட்டத்தில் ஒரு ஹெக்டயாரில் சராசரி இறப்பர் உற்பத்தி கிலோ கிராம் 432 ஆகும். அதாவது 65 சதவீதமளவு குறைந்த பெறுமானத்தை எடுத்திருந்தது. | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளின் பிரகாரம் ஒரு ஹெக்டயாரிற்கு மொத்த இறப்பர் கன்றுகளின் எண்ணிக்கை 516 ஆவதுடன் தோல்வியடையும் கன்றுகளையும் கவனத்திற் கொள்ளும் போது ஒரு ஹெக்டயாரில் காணப்படும் இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 300 - 500 இடையிலான அளவொன்றாகும். எவ்வாறாயினும் கூட்டுத்தாபனம் முகம்கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக இறப்பர் பயிர்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்ள இயலாதுள்ளதுடன் அதன் காரணமாக இறப்பர் உற்பத்தி குறைவடைந்துள்ளது. | கைத்தொழிலின் நியமங்களின் பிரகாரம் போதியளவில் இறப்பர் கன்று எண்ணிக்கை மற்றும் இறப்பர் உற்பத்தியை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பேறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஆ) பிரகாரம் குறைந்தபட்சம் மூன்று வருட காலத்திற்காக தேவையான பெறுகைகள் நடவடிக்கைகள் உள்ளிட்ட பெறுகைகள் திட்டமொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிறுவனம் பல ஆண்டுகளாக முகம்கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக எதிர்வரும் 03 ஆண்டுகளிற்காக பெறுகைகள் திட்டமொன்றை தயாரிப்பது கடிடனமாகவுள்ளது. | பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து உரிய தரப்பினரிற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | விலைகள் கோரப்படாது தலைவரின் பயன்பாட்டிற்காக ரூபா 890,680 தொகை செலுத்தி 2019 பெப்ரவரி 23 திகதி முதல் 2019 திசெம்பர் 06 திகதி | 2019 ஆண்டில் அதன் போது இருந்த தலைவரிற்காக வாகனமொன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் போது | அனைத்து கொள்வனவுகளும் அரச பேறுகைகள் வழிகாட்டிக் |

| | | | |
|---|---|---|---|
| | வரையான காலப்பகுதிக்காக வாகனமொன்று பெறப்பட்டிருந்தது. | விலைகள் கோரப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் பெறுகைகள் குழு தீர்மானத்தின் மீது குறித்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவ்வாறாயினும் குறித்த பெறுகைகள் கோவையை உரியவாறு நடாத்திச் சென்றிருக்கவில்லை. | கோவையின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டியதுடன் கோவை பராமரிப்பை முறையாக்க வேண்டும். |
| (இ) | அரச பேறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12.2 (அ) பிரகாரம் ஒரு கேள்வி மனு மாத்திரம் கிடைத்தால் சந்தை விலைகளுடன் ஒப்பிட்டு கேள்வி விலைகள் நியாயமெனில், அந்த கேள்வி ஏற்புடையதென கருத முடியுமென குறிப்பிட்டுள்ள போதும், கூட்டுத்தானத்தில் 120 லீற்றர் இரசாயன பொருட்களை கொள்வனவு செய்ய ஒரு வழங்குனர் மாத்திரம் ரூபா 207,000 ஆன கேள்வியை சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பத்தில் சந்தைப் பெறுமதியுடன் அந்த விலையை ஒப்பிடாது அந்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். | 2019 ஆண்டில் தோட்டங்களிற்காக புல் ஒழிப்பு இரசாயன பசளை (Hexaconzole) 120 லீற்றர் கொள்வனவு செய்ய 03 நிறுவனங்களில் இருந்து விலைகள் கோரப்பட்டதுடன் ஹேலீஸ் நிறுவனம் மாத்திரம் வலைகளை சமர்ப்பித்திருந்தது. மற்றைய இரண்டு நிறுவனங்களும் அவர்களிடம் இருப்பு இல்லை என குறிப்பிட்டுள்ளனர். ஹேலீஸ் நிறுவனத்தினால் வழங்கியிருந்து விலை ரூபா 207,000 ஆவதுடன் அந்த விலைகள் சாதாரண சந்தை விலைகளுடன் ஒப்பிட்ட பின்னர் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வாறாயினும் அது தொடர்பான விபரங்களை கோவைகளில் குறிப்பிடப்படவில்லை. | சந்தை பெறுமதியுடன் விலைகள் ஒப்பிடப்பட்ட பின்னர் வழங்குனரை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கோவை பராமரிப்பை முறையாக்க வேண்டும். |
| (ஈ) | 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை செயற்படு பணிப்பாளரிற்கு வழங்கியுள்ள 03 வாகனங்களிற்காக ரூபா 2,740,890 தொகை வாடகையாக செலுத்தப்பட்டுள்ளதுடன் அங்கு பெறுகைகள் செயற்பாடுகளில் வழங்குனர்களை தெரிவு செய்யும் போது பதிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து அல்லது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.4 வழிகாட்டி பிரகாரம் வெளிப்படைத் தன்மையுடன் வழங்குனர்களை தெரிவு செய்தல், கேள்வி விலை பதிவேடொன்று தயாரிக்கப்படாமை, வழங்குனர்களிற்கு 3.4.2 (அ) பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் குறித்த சேவையை பெற்றுக் கொள்ளும் போது இருக்க வேண்டிய நிபந்தனைகள் தொடர்பாக எவ்வித குறிப்பும் | இந்த சம்பவம் தொடர்பில் குறித்த அலுவலர்களிடம் விபரங்கள் பற்றிய விசாரணையொன்றை மேற்கொண்டுள்ளதுடன் அது தொடர்பாக அந்த அலுவலர்களினால் வழங்கப்படும் பதிலின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்துக் கொள்கிறேன். | விசாரணையொன்றை மேற்கொண்டு பெறுகைகள் வழிகாட்டியை மீறிய தரப்பினரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடப்பட்டிருக்காமை, விலைகள் கோரும் கடிதம் பதிவுத் தபாலில் அல்லது 6.3.1 (அ) பெறுகைகள் வழகாட்டி பிரகாரம் ஏனைய ஏற்றுக் கொள்ளக் கூடிய வழியின் மூலம் அனுப்பியிருக்காமை, நிறுவனம் அல்லது நபர்களிடமிருந்து கிடைத்த விலைகள் பதிவுத் தபாலில் அனுப்பியிருக்காமை, 6.3 (அ) பிரகாரம் முத்திரையிட்ட டென்டர் பெட்டியொன்றிற்கு இட்டிருக்காமை, 6.3.3 பிரகாரம் கேள்வி மணுக்களை பகிரங்கமாக திறக்க நடவடிக்கை எடுத்திருக்காமை மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவாக பெறுகைகள் குழு செயற்பட்டிருந்தது. KH 1932 வாகனத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் போது தெரிவு செய்யப்பட்ட மணுதாரர் சமர்ப்பித்த விலைகளை தவிர ஏனைய விலைகள் இரண்டும் போலியான விலைகள் என கணக்காய்விற்கு உறுதியாகி இருந்தது. அவ்வாறே இந்த விலைகளில் குறிப்பிட்டுள்ள வாகன இலக்கங்களை பரீட்சிக்கையில் அந்த இலக்கத்துடன் இந்த விலைகளை சமர்ப்பித்த நபர்களுக்கல்லாது ஏனைய நபர்களிற்கு மற்றும் நிறுவனங்களிற்கு சொந்தமான வாகனங்கள் என வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (உ) | கூட்டுத்தாபனத்தின் நிலையான சொத்துக்களை மதிப்பிடுவதற்காக தேசிய போட்டி கேள்வி முறையை பின்பற்றியிருந்ததுடன் பேறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பிரகாரம் கேள்வி விலைகளை கோரும் குறைந்தபட்ச கால எல்லை 21 நாட்கள் ஆன போதும், ஒப்பந்ததாரருக்கு 14 நாட்கள் காலமொன்றை மாத்திரம் வழங்கியிருந்ததுடன், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்றுகூடுவதற்கு மூன்று அலுவலர்கள் சமுகமளித்துள்ள போதும் அந்த மூன்று அலுவலர்களில் ஒரு அலுவலர் கையொப்பமிட்ட திகதியை குறிப்பிட்டில்லாததுடன் தெரிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.11 பிரகாரம் கேள்வி மணுக் காப்பொன்றை சமர்ப்பித்து இருக்கவில்லை. மேலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) பிரகாரம் இரு தரப்பினரிற்கிடையில் ஒப்பந்த உடன்படிக்கைக்கும் உட்பட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் நிலையான சொத்துக்களை மதிப்பிடுவது தொடர்பாக ஆரம்ப பெறுகைகள் நடவடிக்கைகளில் குறைபாடு இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கிறோம். அவ்வாறாயினும் நிதியத்தை பெற்றுக் கொள்வதன் பிரச்சினை காரணமாக இப் பணி இடைநடுவே கைவிடப்பட்டது. | பேறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் முறையே கேள்வி மணு கோரும் போதிய காலமொன்றை வழங்குதல், கேள்வி மணு காப்பொன்றை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஒப்பந்தமொன்றிற்கு உட்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | களுத்துறை மாவட்டத்தில் காணி பிரிப்பிற்கு கேள்வி மனு கோருவதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பிரகாரம் தேசிய போட்டி கேள்வி முறையில் கேள்வி மனுக் கோரும் குறைந்தபட்ச கால எல்லை 21 நாட்கள் ஆன போதும், அதற்காக கேள்வி மனுக்களை சமர்ப்பிக்க 07 தினங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.11 (அ) பிரகாரம் கேள்வி மனுதாரர்களால் கேள்வி மனுக் காப்பொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை எனவும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) பிரகாரம் இரு தரப்பினரிற்கும் இடையில் ஒப்பந்த உடன்படிக்கைக்கு உட்பட்டு இருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. மேலும் தெரிவு செய்யப்பட்ட மனு தாரரால் குறித்த அளவை நடவடிக்கை பூர்த்தியாகியுள்ளது என அறிவித்து உடன்பட்ட தொகையை பெற்றுத் தருமாறு கோரியுள்ள போதும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.4 பிரகாரம் சேவை தொடர்பாக உடன்படிக்கையில் வழங்கியுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க சேவை மேற்கொள்ளப்பட்டதற்கான ஒழுங்கான உறுதிப்படுத்தலை நிலையப் பொறுப்பு அதிகாரியினால் வெளியிட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டில் களுத்துறை மாவட்டத்தில் நிவ்செட்டில் தோட்டத்தில் 83 ஏக்கர்களில் அளவை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான பெறுகைகள் நடவடிக்கைகளின் போது குறைபாடுகள் இடம் பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கிறோம். இதன் பின்னர் அவ்வாறு இடம் பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பேறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் கேள்வி மனு காப்பொன்றை, இரு தரப்பு ஒப்பந்தமொன்று மற்றும் ஏற்பாடுகளிற்கு இணங்க சேவை மேற்கொள்ளப்பட்டதற்கான ஒழுங்கான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கோமர தோட்டத்தில் நீர் வழங்கல் தொகுதியை நவீனமயமாக்க விலைகளை கோரும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பிரிவில் குறிப்பிடப்படும் படிவத்தின் பிரகாரம் கேள்வி மனு திறக்கும் நடவடிக்கைகளை அறிக்கையிடாமை, பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.11.1 இல் குறிப்பிடப்படும் படிவத்தில் கேள்வி மனு மதிப்பீட்டு அறிக்கையை தயாரிக்காமை மற்றும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைகளில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்யும் குறித்த கடிதங்கள் கோவைகளில் காணப்படாமை அவதானிக்கப்பட்டன. | 2019 ஆண்டில் கோமர தோட்டத்தில் நீர் வழங்கல் தொகுதியை நவீனமயமாக்கல் தொடர்பான பெறுகைகள் நடவடிக்கைகளின் போது குறைபாடுகள் இடம் பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்கிறோம். இதன் பின்னர் அவ்வாறு இடம் பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பேறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் கேள்வி மனு காப்பொன்றை, இரு தரப்பு ஒப்பந்தமொன்று மற்றும் ஏற்பாடுகளிற்கு இணங்க சேவை மேற்கொள்ளப்பட்டதற்கான ஒழுங்கான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 2017 ஜுலை 25 ஆம் திகதிய, 2017 செப்டம்பர் 13 ஆம் திகதிய, 2018 திசெம்பர் 21 ஆம் திகதிய மற்றும் 2019 ஒக்தோபர் 09 திகதிய கடிதங்கள் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 திகதியளவில் 15 நிரந்தர பதவிகளில் பற்றாக்குறையொன்றும், 2 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவி விஞ்சி நியமனமொன்றும், 11 ஒப்பந்த பதவிகளில் அங்கிகரிக்கப்பட்ட பதவிகளை விஞ்சி நியமனமொன்றும் , 2 பதவிகளில் பற்றாக்குறையொன்றும் மற்றும் தற்காலிகமான 2 பதவிகளில் பற்றாகுறையொன்றும் இருந்தன. அதற்கு மேலதிகமாக ஒப்பந்த ஆளணி 03 ஆன போதும், ஒப்பந்த ஆளணியை விஞ்சி 09 பதவிகளிற்காக ரூபா 2,736,095 மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தியிருந்தன. | கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த ஆளணியினுள், ஒவ்வொரு பதவிபகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவி எண்ணிக்கை (நிரந்தர அல்லது ஒப்பந்த) விஞ்சாமை ஆஒணி ஆட்சேர்ப்பு இடம் பெற்றுள்ளது. எந்தவொரு பதவிற்காக நிரந்தர அலுவலர் ஒருவரை நியமிக்காது அப் பதவிற்காக ஒப்பந்த அடிப்படையில் அலுவலர் ஒருவரை ஆட்சேர்க்கப்பட்டு தேவையின் படி குறித்த அலுவலரின் ஒப்பந்த சேவை காலத்தை முடிவுறுத்த முடியுமானதால் அது நிறுவனத்திற்கு மிக சாதகமானதாகும். அதன் பிரகாரம், நிறுவனம் முகம் கொடுக்கும் நிதி நெருக்கடி காரணத்தால் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் பேணிச்செல்ல நேர்ந்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை விஞ்சி ஊழியர் மற்றும் அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யக் கூடாது. |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 5.2 பிரிவின் பிரகாரம் ஏதேனும் பதவியொன்றில் வெற்றிடம் ஏற்பட்டவுடனே அப் பதவிக்காக நிரந்தர அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டிய போதும், 2008 ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற முகாமையாளர் சட்டம் மற்றும் பிரதி பொது முகாமையாளர் பெருந்தோட்டம் ஆகிய பதவிகளிற்காக நிரந்தர அலுவலர் ஒருவரை நியமிக்காது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட அலுவலர்களிற்காக 2019 ஆண்டிற்காக முறையே ரூபா 350,373 ஆன மற்றும் 377,735 ஆன சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | முகாமையாளர் - சட்டம் எனும் பதிக்காக 2022.01.03 திகதி நிரந்தர அடிப்படையில் பெண் அலுவலர் ஒருவரை ஆட்சேர்த்ததுடன். பிரதி பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் எனும் பதவிக்காக 2021.01.06 திகதி அதன் போது கலபிஹில்ல தோட்டத்தில் தோட்ட அத்தியட்சகராக இருந்த அலுவலர் உரிய திட்டத்தினை பின்பற்றி நியமிக்கப்பட்டுள்ளார். | வெற்றிட பதவிக்காக நிரந்தர அலுவலர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 ஜுலை 18 திகதிய இலக்கம் 3/2018 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் II பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரமின்றி, செயற்படு | 2019 செயற்படு பணிப்பாளராக நியமனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது முன்னால் விடய அமைச்சரினாலாகும். ஏனைய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி பதவியணியினர் |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர், ஆலோசகர், எழுதுனர் மற்றும் தொழிலாளர் போன்ற 12 பதவிகளிற்காக ஒப்பந்த அடிப்படையில் மற்றும் நிரந்தர அடிப்படையில் 12 அலுவலர்களை ஆட்சேர்த்திருந்ததுடன், அவ் அலுவலர்களிற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 4,321,049 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | கடமை தேவைப்பாட்டின் பிரகாரமாவதுடன் அந்த ஆட்சேர்ப்பிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | ஆட்சேர்ப்பை மேற்கொள்ளக் கூடாது. |
| (ஈ) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி தலைமை அலுவலகத்தில் 07 புதிய பதவிகள் மற்றும் 02 பதவி உயர்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2,934,690 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வு அறிக்கையில் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாமின்றி முகாமைத்துவ உதவியாளர், செயற்படு பணிப்பாளர், சட்ட அலுவலர், செயற்படு பணிப்பாளரின் சாரதி மற்றும் இரண்டு தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன் 2009.09.18 திகதிய இலக்கம் 29/2019 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2019.09.30 திகதிய இலக்கம் EC/EDR/PRE/INQ கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரினதும் பரிந்துரையின் மீது குறித்தவரின் சேவையை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. தோட்ட அத்தியட்சகரின் கடமையை நிரந்தரமாக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2020 பெப்ரவரி 28 திகதியின் பின்னர் நிறுவனத்தின் அனைத்து ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வுகள் ஒழுங்கான திட்டத்தை பின்பற்றி மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பு செய்யக் கூடாது. |
| (உ) | 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் 12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 பந்தி பிரகாரம் ஏதேனும் பதவிக்காக ஆட்சேர்க்க இருக்க வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் உள்ளிட்ட அங்கீகார ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு செயற் திட்டம் கூட்டுத்தாபனத்திடம் இருக்கவில்லை. | நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட நகல் ஆட்சேர்ப்புத் திட்டம் பெறுந்தோட்ட அமைச்சின் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் 03 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டது. அதன் பிரகாரம் திருத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு | அங்கீகார ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு செயற் திட்டம் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்புவதற்காக 2021.02.04 கடிதம் மூலம் பெறுந்தோட்ட அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஊ) | தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 10.2 உப பிரிவின் பிரகாரம் சம்பள உயர்வு வழங்குதல் மறுக்கப்படும் சந்தர்ப்பத்தை தவிர ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் 10.1 உப பிரிவு பிரகாரம் சம்பள உயர்வுத் தினத்திற்குரியதாக ஆண்டின் சம்பளம் உயர்வை உழைத்துப் பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதற்கு மாற்றமாக முகாமைத்துவத்தினால் எவ்வித மதிப்பீடுமின்றி 2017,2018 மற்றும் 2019 ஆண்டுகளில் சம்பள உயர்வு 01 இனைவிட அதிக சம்பள உயர்வு அளவுகளை வழங்கியுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக 2019 ஆண்டில் கூட்டுத்தான ஆளணியில் 27 பேர்களுக்கு ரூபா 1,253,223 ஆன சம்பள உயர்வு செலுத்தப்பட்டிருந்தது. | 2017 மே மாதமளவில் கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டியிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்த காரணத்தால் சேவை ஊக்குவிப்பாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மேற்குறித்த சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மேலதிக சம்பள உயர்வ வழங்கப்படாததுடன் தற்போது ஆளணி சம்பள உயர்வு ஒழுங்காக வழங்கப்படுகிறது. | சம்பள உயர்வு வழங்கும் போது தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 3 உப பிரிவின் பிரகாரம் அரச சேவையின் அனைத்து வெற்றிடங்களிற்கும் ஆட்சேர்ப்பு அதிகாரியினால் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு இணங்கியதாக பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணபம் கோர வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் மேற்கொண்ட 23 புதிய ஆட்சேர்ப்புக்கள் பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படாது ற்கொள்ளப்பட்டிருந்தன. | தோட்டங்களின் சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆனணி / தோட்ட தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டவிதிகளிற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |